# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை (27-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 180


## திருமலையில் பிரதான மின்கோபுரம் தகர்ப்பு!

### நகரில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, மே 27

திருகோணமலையில் ஹபரணை வீதியில் கப்பல்துறைக்கு அருகில் உள்ள மின்கோபுரம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இதனால் திருகோணமலை உட்பட கிண்ணியா, சேருவல, மூதூர் போன்ற பல பகுதிகளுக்கான மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டது.

மின்கோபுரம் தகர்க்கப்பட்டதை அடுத்து திருகோணமலை நகரில் நேற்றுக் காலை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கடற்படைத் தளத்துக்குச் செல்லும் டொக்யாட் வீதி, தபால் நிலைய வீதி ஆகியவற்றில் வாகனங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மின்கோபுரம் தகர்க்கப்பட்டதால் மின்விநியோகம் பாதிக்கப்பட்ட திருமலை நகரம், கிண்ணியா பகுதிகளுக்கு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மீண்டும் மின்விநியோகம் வழங்கப்பட்டது. (ஐ-150-3)

## ஜி.சீ.ஈ. பெறுபேறு நாளை

யாழ்ப்பாணம், மே 27

கடந்த வாரம் வெளியான ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையின் யாழ். மாவட்டப் பெறுபேறுகள் நாளை புதன்கிழமை இங்கு எடுத்து வரப்படவுள்ளன.

கொழும்பில் இருந்து கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் அவற்றை இங்கு எடுத்து வருகிறார். (ஐ)

## ஈழ விவகாரம்! சென்னையில் நாளை கூட்டம்

சென்னை, மே 27

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து பேசுவதற்காக திராவிடர் கழகம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 50 லொறிகளில் வன்னிக்கு உணவு

### அவசர விநியோகம்

வவுனியா, மே 27

வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு தினசரி ஐம்பது லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு வவுனியா அரச அதிபருக்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கின்றது.

இதனையடுத்து இப்பகுதிகளுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை உடன் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாட்டில் வவுனியா அரச அதிபர் ஈடுபட்டிருந்தார்.

இந்த உணவு லொறிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கண்காணிப்புடன் செல்லும்.

வவுனியா — மன்னார் வீதி வழியாகவே இந்தப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன.

இந்தப் பொருள்களை ஏற்றிச்செல்லும் லொறிகள் பயணம் செய்யவேண்டிய பாதையையும் பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாகக் குறிப்பிட்டு — வரையறை செய்து — அறிவித்துள்ளது.

இதுவரை இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்திலிருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக வரும் லொறிகளுக்கு சாந்தசோலையில் வைத்தே அப்பொருள்கள் ஏற்றப்படுவது வழக்கம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் படைகள் நகர்வு 2ஆம் நாளுடன் ஸ்தம்பிதம்!

## புலிகளின் கடும் எதிர்ப்பால்

கொழும்பு, மே 27

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கா படைகளின் வடக்கு நோக்கிய நகர்வு புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக இரண்டாம் நாளுடன் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது எனச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஓமந்தையிலிருந்து இரண்டாம் கட்ட படை நடவடிக்கையை கடந்த சனியன்று பெரிய எடுப்பில் ஆரம்பித்து, வடக்கு நோக்கி நகரமுயன்ற ஸ்ரீலங்காப் படைகள், கடந்த ஞாயிறன்று சுமார் நான்கு கிலோமீற்றர் தூரம் — ரம்பைக்குளம் வரை — முன்னேறிய நிலையில், தொடர்ந்து முன்னேற முடியாது தரித்து நிற்பதாகக் கூறப்பட்டது.

தற்போதைய நிலைமை குறித்து பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு அதன் வவுனியாச் செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே நேற்றிரவு கூறியதாவது:-

இரண்டாம் கட்ட நட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து அகோர குண்டு வீச்சு; கடற்பகுதியில் கண்காணிப்பு தீவிரம்

கொழும்பு, மே 27

வன்னியில் படையினரின் நகர்வு ஸ்தம்பித்துள்ள போதிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் மீது தொடர்ந்து விமானக் குண்டு வீச்சுகளும், ஆட்லறி ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அரசுத் தரப்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:

விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகளும் ஜெட் விமானங்களும் போராளிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. பீரங்கிப் படைகளும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

போராளிகள் கடல் மார்க்கமாகப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடற்படையினரின் நவீன யுத்தக் கப்பல்கள் பல தற்போது கடற்பகுதிப் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

விசேட இராணுவப் பயிற்சி பெற்ற இரண்டாயிரம் கடற்படைக் கொமாண்டோக்கள் இந்தப் பகுதிக்குத் தரை மார்க்கமாக அனுப்பப் பட்டுள்ளனர். தேவையேற்படும் பட்சத்தில் அங்கு அனுப்பி வைக்கப்பட மேலும் பல அணியினர் தயார் நிலையில் உள்ளனர் எனக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்த போராளிகளை [illegible] இந்தியாவுக்கு கொண்டு செல்ல முடியாதவாறு கடற்படையினரின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரம்பைக்குளம் பகுதியில் 13 புலிகள் களப்பலி

ஓமந்தைக்கு வடக்கே ரம்பைக்குளத்தைக் கைப்பற்ற முனைந்த ஸ்ரீலங்காப் படைகளுடன் கடந்த இருநாள்களாக நடைபெற்ற சண்டையில் தமது தரப்பில் மூன்று பெண் போராளிகள் உட்பட 13 போராளிகள் களப்பலியானதாக புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

அவர்களின் பெயர் விவரமும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

- ★ கேதீஸ்வரன் ஞானப்பிரகாசம்.
- ★ கந்தையா இந்திரன்.
- ★ கனகசபாபதி ஜெயராஜ்.
- ★ செபஸ்ரியாம்பிள்ளை ஜெயராஜ்.
- ★ கணபதிப்பிள்ளை உதயகுமார்.
- ★ மார்க்கண்டு ஜினதாஸன்.
- ★ கந்தசாமி நந்தகுமார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி. பி. பெயரில் கைது சம்பவங்கள்

### அக்கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், மே. 27

ஈ. பி. டி. பியின் பெயரைக் கூறி சில இடங்களில் பொதுமக்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அத்தகைய சக்திகளின் போக்கைத் தாங்கள் கண்டிப்பதாகவும் தெரிவித்து ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. கே. வி. கே. ஜெகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன் முழுவிவரம் வருமாறு;

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களில் சீருடையில்லாமல் ஆயுதங்களுடன் வந்தவர்கள் — அவர்களில் சிலர் சரளமாகத் தமிழ் பேசக்கூடியவர்கள் — எமது இயக்கத்தின் பெயரைக் கூறி சில பொதுமக்களைக் கைது செய்து கொண்டு சென்றிருப்பதாக எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கூரைச் சீற் உடைந்ததால் ரணிலின் இருக்கைக்கு அருகே திடீரென வீழ்ந்த சிறுவன்!

### திருமண வைபவத்தில் சம்பவம்

கொழும்பு, மே 27

திருமண வைபவத்துக்கான அலங்கார வேலைகளை கூரையில் இருந்து மேற்கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கூரைச் ''சீற்'' திடீரென உடைந்து கீழே வீழ்ந்தான். சிறுவன் வீழ்ந்த இடத்தில் அமர்ந்திருந்த ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும், கொழும்பு மேயர் கரு ஜெயசூரியாவும் மயிரிழையில் தப்பினர்.

கொழும்பு மாநகரசபை உறுப்பினரான லீலா

(8ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. ஊழியர் இன்று வேலைக்கு

கொழும்பு, மே 27

கடந்த சில வாரங்களாக மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை இன்று செவ்வாய்க்கிழமை முதல் இடைநிறுத்துவது எனப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர் தொழிற் சங்கங்கள் கூட்டாகத் தீர்மானித்துள்ளன.

பல்கலைக் கழக கூட்டு தொழிற்சங்கத் தலைவர் யு. பி. லொக்குகமகே இத்தகவலைத் தெரிவித்தார்.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரான முன்வைத்த தீர்வு யோசனைகளில் பூரண நம்பிக்கை வைத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அமைச்சருக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே இந்த இணக்கம் ஏற்பட்டிருக்கிறது. (உ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம், வேலணை

## பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

# வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் **4 6 - 97** ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 2.00 மணிக்கு வேலணையில் பாடசாலையின் புதிய அமைவிடத்தில் நடைபெறும்.

பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

- அதிபர்

(47193)

# NEAR TEACHER

## தபால் மூலம் கல்விச் சேவை

★ குடாநாட்டு மாணவர்களுக்கு ஒருவரப்பிரசாதம்!
★ எமது சேவையில்:-
★ ஆண்டு 6 — O/L வரையான மாணவர்களுக்கு தபால் மூலம் மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள்.
★ A/L மாணவர்களுக்கு விரிவுரைக் குறிப்புக்கள், மாதிரி வினாத்தாள்கள்.
★ ஆங்கில கல்வித்துறையின் அற்புதமான குறிப்புக்கள்,
★ மேலதிக விவரங்களுக்கு:-

முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையுடன் **02 - 06 - 97** க்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

**- கல்வித்துறை பிரதம அலுவலர்**

186/22, குருநாகர் வீதி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/791)

## வணிக மாணவ மன்றம்
## யாழ். பல்கலைக்கழகம்
### அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு

நாளை 28 - 05 - 1997 இல் நடைபெறவிருந்த எமது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்,
வணிக மாணவ மன்றம்.

(47190)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## முக்கிய அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் காணி உபரிவிடுதலோ, பழைய கட்டடங்களை, எல்லை மதில்களைத் திருத்தவோ, புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதோ, அங்கீகரிக்கப்படாத உபயோகமாற்றத்தையோ யாழ். மாநகரசபையின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

கடந்த காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடந்திருப்பின் உரிமையாளர் அதுபற்றி மாநகரசபை திட்டமிடல் பிரிவிற்கு அறிவித்து அதனைச் சட்டபூர்வமான அபிவிருத்தியாக மாற்றுவதற்கு 30-05-97 வரை சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. 30-05-97க்குப் பின்னர் அறிவிக்கப்படும் எந்தவொரு அங்கீகாரமற்ற அபிவிருத்தியும் இந்தச் சலுகையை அடைய முடியாது பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இந்த ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் தமது சிரமங்களையும் தவிர்ப்பதுடன் சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இருக்கும். அத்துடன் நகரின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அவ்வாறான வளர்ச்சிக்குத் தடையாக அமையக்கூடிய கட்டடங்களுக்கு அனுமதியெதுவும் வழங்குவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் மக்கள் திட்டமிடல் பிரிவின் ஆலோசனையையும், அங்கீகாரத்தையும் கட்டடங்கள் அமைப்பதற்கு முன்பதாகவே பெற்றுச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவ்வாறான கட்டட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்குமெனச் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழாமிற்குத் தங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**வே.பொ. பாலசிங்கம்,**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23-05-1997

(சி/790)

## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், மே 27

வளவைத் துப்புரவு செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை மிதிவெடியில் சிக்கிய வயோதிபப் பெண் ஒருவர் தனது வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

ஏழாலை மேற்கு கோட்டைக் காடு பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கணபதிப்பிள்ளை தவமணி (வயது 62) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னரே இவர் கொழும்பில் இருந்து திரும்பியிருந்தார்.

(ஐ-15)

## இன்று கப்பல் சேவை

கொழும்பு, மே 27

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு 790 பயணிகளுடன் இரு கப்பல்கள் இன்று புறப்பட இருப்பதாக யாழ். சிவில்நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் செல்லப் பதிவு செய்தவர்களை இன்று காலை 7 00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## விளையாட்டு நிகழ்வு

திருநெல்வேலி, மே27

ஆனைக்கோட்டை வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் 29-ம் திகதி நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கதிர் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம அதிதியாக நல்லூர் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் கலந்து கொள்வார்.

(இ-135)

## விவேகானந்தர் நூற்றாண்டு கருத்தரங்கு

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டுக் கருத்தரங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி), 'சாந்தி சகிப்பு நோக்கிய கல்வி' எனும் தலைப்பிலும், ஓய்வுபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை 'கருவுற்ற நாள் முதலாய்' எனும் தலைப்பிலும் கருத்துரை வழங்குவார்கள்.

சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் என்ற தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா விரிவுரையாற்றுவார்.

இக் கருத்தரங்குக்கு யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா தலைமை வகிப்பார்.

(இ-173)

## நுளம்பு ஒழிப்பு கருத்தரங்கு

திருநெல்வேலி, மே 27

வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவில் டெங்கு மற்றும் மலேரியா நுளம்பு ஒழிப்பு பற்றி ஆராய்வதற்கான முக்கிய கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் சங்கானையிலுள்ள பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் இப் பிரிவிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், குடும்ப நல சேவையாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

([illegible])

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்லக்கண்டு

(முன்னாள் காவலாளி, ப. நோ. கூ. சங்கம்-பண்டத்தரிப்பு)

மாதகல் கிழக்கைச் சேர்ந்த கந்தையா செல்லக்கண்டு 25-05-97 இல் காலமாகிவிட்டார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், விநாயகராசா, ஞானாம்பிகை, பாலகிருஸ்ணன், நாகேஸ்வரி (கனடா), புஸ்பராணி, விக்கினேஸ்வரன் (கனடா), வசந்தராணி, கிருஸ்ணகுமார், ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், உருத்திரசிங்கம் (கனடா), சண்முகராசா, பாமதேவன், சிவனேஸ்வரி, சுகந்தி, மகேந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அயூரதி, தர்மினி, ரூபன், டிலாணி, கிரிகரன், சிவசொரூபன், பிறிந்தா, தபிஷா, ஷோபனா, அர்ச்சுதன், திருமாலவன், தர்ஷன், டபிஷன், நிதர்ஷன், நிருஷா, நிசந்தா, கிருஷ்ணா, நிரோஜா, அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-05-97 பிற்பகல் 3-00 மணிக்கு மாதகல் கிழக்கில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. விநாயகராசா
(மகன்)

மாதகல். (47182)

## திருமதி ஜோண்கமரன் அலிஸ்தவமணி

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோண்கமரன் அலிஸ்தவமணி 25-05-1997 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஜோண்கமரனின் (C.I.D பொலீஸ்) அன்பு மனைவியும், லூசி தம்பிரட்ணத்தின் (U. S. A.) அன்புச் சகோதரியும், ஜெசிக்கா (U. S. A), ராஜரட்ணம் (U. S. A.), நவசந்திரபாலா (U S. A.), செல்வம் (U. S. A.) ஆகியோரின் பெரியதாயாரும், ஜீவன், மத்யூ, நவீன், பிரசாத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் 26-05-1997 காலை 10 மணிக்கு இலங்கை பெந்தகொஸ்தே சபையினரால் நடத்தப்பெற்று பூதவுடல் உடுவில் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சின்ராசா

''கமரஸ்தன்'',
டச்றோட்,
உடுவில். (47180)

## தியாகராசா சண்முகராசா

(உரிமையாளர், வை. சி. சி. கு. புகையிலைக் கடை)

இணுவில் சந்தி, தியாகராசா சண்முகராசா (23 - 05 - 97) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி சிவசக்தி சண்முகராசா அவர்களின் அன்புக் கணவரும், திருமதி கிருஸ்ணமாலா சிவபாதசுப்பிரமணியம், ரவீந்திரன், திருமதி இராசேஸ்வரிதேவி நடேசு, திருமதி கௌசல்யா சூரியகுமாரன், செல்வி வானதி, செல்வி வினோதா (யா/ இந்து மகளிர் கல்லூரி, க. பொ. த. உயர்தரம் 97 ஆம் ஆண்டு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆசிரியர் சிவபாதசுப்பிரமணியம் (ஐயாக்கிளி), நடேசு, சூரியகுமாரன் (உரிமையாளர், சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கொழும்பு) அவர்களின் அன்பு மாமனும், கௌதமி, சூரியபிரசாத் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 27-5-97 செவ்வாய்க்கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 10 மணிக்கு இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

சக்தி இல்லம்,
இணுவில் சந்தி,
இணுவில். (47194)

## திருமதி மார்க்கண்டு முத்தீஸ்வரி

பறாளை வீதி, சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு முத்தீஸ்வரி 26- 05- 97 அன்று 9.30 மணிக்குச் சிவபாதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், Dr. தம்பிராஜா (கட்சன், 12534, U. S. A.), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தம்பிராஜாவின் U. S. A.) அன்பு மாமியாரும், செல்வி த. தேவகி (U. S. A) செல்வன் த. மோகன் (U. S. A.) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27- 05- 1997 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10: 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. பரமேஸ்வரி
(மகள்)

பறாளை வீதி,
சுழிபுரம். (47188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடது சாரிக் கூட்டணி பிரான்ஸில் முன்னணியில்

## 2 ஆம் கட்ட வாக்களிப்பு அடுத்த ஞாயிறு

பிரான்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது கட்ட வாக்களிப்பில் இடதுசாரிக் கூட்டணி கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளது.

கம்யூனிஸ்ட்டுக்களும், சோசலிஸ்ட்டுக்களும் இணைந்து போட்டியிட்ட இடதுசாரிக் கூட்டணியினர் 40.7 சத வீத வாக்குகளையும்—

தற்போதைய அதிபர் ஷிராக்கின் மத்திய வலதுசாரிக் கூட்டணி 37.2 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

தீவிர வலதுசாரிகளைக் கொண்ட தேசியக்கட்சிக்கு 15 சதவீத வாக்குகள் கிடைத்தன.

இரண்டாம் கட்ட வாக்களிப்பு அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

உரிய காலத்துக்கு 10 மாதங்களுக்கு முன்னராகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவது தெரிந்ததே.

பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 527 ஆகும்.

முதலாவதுகட்ட வாக்களிப்பு முடிவுகள் குறித்து கருத்து வெளியிட்ட அதிபர் ஷிராக் பிரெஞ்சு மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர் என்பதை முதலாம் கட்ட வாக்களிப்பு காட்டுவதாகக் கூறினார். (இ)

# முன்னாள் அதிபர் கபா கினிநாட்டில் தஞ்சம்

## புரட்சியாளர் மீது ஐ. நா. கண்டனம்

அபிஜோன், மே 27

சியராலியோன் அதிபர் அகமதி தேஜோன் கபா, அண்டை நாடான கினிக்கு ஹெலி மூலம் தப்பிச் சென்றுள்ளார்.

மேற்காபிரிக்க நாடான சியராலியோனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவப் புரட்சி இடம்பெற்றது தெரிந்ததே.

அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ள இராணுவத்தினர் புரட்சிச் சபை ஒன்றை ஏற்படுத்தி உள்ளனர்.

இதற்கிடையில் சியராலியோனில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை ஐ. நா. பொதுச் செயலாளர் கொபி அனான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இராணுவ ஆட்சிக்குப் பின்னர் ஒரு வருடத்துக்கு முன்னர் தான் அங்கு சிவில் ஆட்சி ஏற்படுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இராணுவம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. (இ)

# பிரச்சினைக்குரிய தீவுக்கு 20 வள்ளங்களில் சீனர்

## ஜப்பானிய கடற்படை உஷார்!

டோக்கியோ, மே 27

கிழக்கு சீனக் கடலில் உள்ள தகராற்றுக்குரிய நியாகு என்னும் தீவை நோக்கி 20 படகுகளில் சீனர்கள்வருவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து ஜப்பானிய கடற்படை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீவுக்கு சீனாவும், தைவானும், ஜப்பானும் உரிமை கொண்டாடுகின்றன.

ஹொங்கொங்கில் இருந்து புறப்பட்ட இந்த படகுகளில் ஒன்றைநோக்கி ஜப்பானியக் கடற்படையினர் கண்ணீர்ப் புகைக்குண்டு ஒன்றை வீசினர். இந்தத் தீவுப் பகுதியில் ஜப்பானால் அமைக்கப்பட்டிருந்த வெளிச்ச வீடு ஒன்றை படகுகளில் வந்தோர் தகர்க்க முற்பட்ட போதே கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தகராற்றுக்குரிய இந்த தீவைச்சுற்றி 50-க்கு மேற்பட்ட ஜப்பானிய கடற்படைக் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தீவுப்பகுதியில் பெரும் அளவில் மீன் வளம் இருந்து வருவதாலும் ஜப்பான் இதனை முழு அளவிலும் அனுபவிக்கிறது. (இ)

# வட ஆப்கனின் முக்கிய கணவாய் எந்நேரமும் வீழ்ச்சி அடையலாம்

## சிரேஷ்ட தளபதி ஒருவர் கட்சி மாறினார்

காபூல், மே 27

வட ஆப்கானிஸ்தானில் உள்ள ஸலான் பாத் என்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கணவாய் எந்நேரமும் தலிபான் படைகளிடம் வீழ்ச்சி அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கணவாயை தலிபான்படைகள் தாக்காது இதுவரை எதிர்த்து வந்த பிரதான தளபதி ஒருவர் கட்சிமாறி தலிபானுடன் சேர்ந்துள்ளார்.

தலிபான் படைகளால் மட்டுமே ஆப்கானிஸ்தானில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று வஸிம் சொலாங்கி என்ற இந்த தளபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை — தலிபான் படைகள் இனிமேல் தடையேதுமின்றி இந்துக்குஷ் மலைகளினூடாக வடக்கு நோக்கிச் சென்றுவிடுவார்கள் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்,

தலிபான் படைகள் டாங்கிகள், லொறிகள், ஜீப்வாகனங்கள் சகிதம் அப்பகுதியூடாகப் போவதற்குத் தயாராகி வருவதாக கூறப்படுகின்றது.

வட ஆப்கானிஸ்தானின் ''யுத்தப்பிரபு'' எனப்படும் ஜெனரல் அப்துல் ரஸித் டொஸ்தமின் முன்னைய பலமான கோட்டையாக விளங்கியதும், வடக்கு ஆப்கானிஸ்தானின் தலைநகரமுமான மஸாரே ஷெரீபினை கடந்த சனிக்கிழமை தலிபான் படைகள் கைப்பற்றியது தெரிந்ததே. (இ-5)

# முழு ஆப்கானிஸ்தானும் தலிபான் கட்டுப்பாட்டில் வரும்

## பாகிஸ்தான் நம்பிக்கை

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கோகார் அயூப்கான் இன்னும் சில நாள்களில் தலிபான் படையினர் முழு ஆப்கானிஸ்தானையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விடுவர் என நம்பிக்கை வெளியிட்டார்.

தலிபான் படையினர்ஏற்கனவே 26 மாகாணங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறார்கள் என்றும்—

ஏறத்தாழ வேறுபட்ட எல்லா இனத்தவர்களும் தலிபானை ஆதரிப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஐ. நா. சபையும் தலிபான் அரசை அங்கீகரிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். (இ-5)

# இடிபாடுகளிடையே இன்னும் சடலங்கள்

## இந்தோனேஷியாவில் மீட்புப் பணி

ஜகார்த்தா, மே 27

தேர்தல் பிரசாரங்களின் போது இந்தோனேஷியாவில் இடம் பெற்ற வன்முறைகளினால் இறந்தவர்களின் சடலங்களை கண்டெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் வியாழக்கிழமை அங்கு தேர்தல்கள் நடைபெற இருப்பது தெரிந்ததே.

இடிபாடுகளிடையே இன்னும் சடலங்கள் கிடக்கின்றன.

கடைகள் பலவற்றைக் கொண்ட 5 மாடிக் கட்டடம் ஒன்று இன்னும் சோதனையிடப்படவில்லை. அதன் வெப்பம் இன்னும் தணியாமல் இருப்பதாக அதனை அணுக முடியாமலிருப்பதாக இந்தோனேஷியப் பொலீஸார் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை தொழுகை முடிய முன்னரே அரசாங்கக் கட்சியான கோல்கர் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரசாரத்தை ஆரம்பித்து விட்டார்கள் என்று கூறி ஆத்திரமடைந்த முஸ்லிம் கட்சி ஆதரவாளர்கள், அரசாங்கக் கட்சி ஆதரவாளர்களை தாக்கியதன் விளைவாகவே கலகம் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவின் பிரபல்ய எதிர்க்கட்சித் தலைவரான மேகாவதி சுவர்ணபுத்திரி இந்தோ

**உலக அரங்கில்**

னேஷிய ஜனநாயகக் கட்சியிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசின் புகழ் நலிந்து கொண்டே வந்துள்ளது என்றும்—

இதன் விளைவாக கடந்த ஜூலை மாதம் கலகங்களும் கலவரங்களும் ஏற்பட்டன என்றும் அரசியல் பிரசார நடவடிக்கைகளின் போது பெரிய அளவில் கலவரங்கள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது என்றும் பி. பி. சி, தெரிவித்தது. (ஐ-5)

# 6 வயது இந்திய சிறுவனின் அசாதாரண சாமர்த்தியம்

புதுடில்லி, மே 27

புதுடில்லியைச் சேர்ந்த 6 வயதுச் சிறுவன் ஒருவன் 2007 ஆம் ஆண்டுக்குள் வரும் எந்த ஒரு திகதியையும் கிழமையையும் துல்லியமாகத் தெரிவிக்கிறான்.

டில்லியைச் சேர்ந்த சித்தாத்த பட்டசாரியா என்ற இச்சிறுவன் எதிர்வரும் ஜூலை மாதமே 2 ஆம் வகுப்பில் கல்வி கற்க உள்ளான் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒருவரின் பிறந்த தினம் குறித்து பேசிக்கொண்டிருந்த சமயம் இச்சிறுவன் திடீரென பிறந்த தினம் வரும் கிழமையை துல்லியமாகத் தெரிவித்தான் என்றும் அதன் பின்னரே அவனிடம் உள்ள திறமையைக் கண்டு பிடித்ததாகவும் அச்சிறுவனின் பெற்றோர் தெரிவித்தனர். (இ)

# பெற்றோல் விலை உயர்வு குறித்து முடிவு எடுக்க முடியாத நிலைமை

## குஜ்ரால் தலைமையில் நடந்த கூட்டம் ஒத்திவைப்பு

புதுடில்லி, மே 27

பெற்றோல் விலையை உயர்த்துவது குறித்து ஆராய கூட்டப்பட்ட ஐக்கிய முன்னணியின் வழிகாட்டும் குழுக் கூட்டம் முடிவு எடுக்க முடியாத நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் குஜ்ரால் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பெற்றோல் விலையை உயர்த்துவது குறித்து நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

எனினும் ஒருமித்த கருத்து நிலவவில்லை.

பிரதானமாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி பெற்றோல் விலை உயர்வை வன்மையாகக் கண்டித்தது:

பெற்றோல் விலையை உயர்த்தினால் எல்லா விலைகளும் உயர்ந்துவிடும் என்று மார்ச்சிய கம்யூனிஸ்ட் கட்சி வாதிட்டது.

காரசாரமான விவாதத்தின் பின்னர் முடிவு எதையும் எடுக்காமல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (இ)

# பிரிட்டிஷ் படைகள் இறுதி வழிபாடு

ஹொங்கொங், மே 27

ஹொங்கொங்கிலுள்ள பிரிட்டிஷ் படையினர் தமது இராணுவத் தலைமையகத்தில் உள்ள ஒரே கிறிஸ்தவ தேவாலயத்தில் தங்களின் அதிகாரபூர்வமான கடைசி மதவழிபாட்டில் கலந்து கொண்டனர்.

ஜூலை மாதம் முதலாம் திகதி ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்படுவதற்கு இடையில் வழிபாடு தொடர்ந்து நடைபெறும் என்றாலும் அந்த தேவாலயத்திலுள்ள நாற்காலி போன்ற மரப் பொருள்களும் மற்றும் மத சம்பந்தமான பொருள்களும் உள்ளூர் தேவாலயங்களுக்கு வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது- (இ - 5)

# 50 ஆயிரம் இடதுசாரிகள் துருக்கியில் ஆர்ப்பாட்டம்

துருக்கி இராணுவம், ஈராக்குக்கு எதிராக நடந்து கொள்ளும் இனப்படுகொலையைக் கண்டித்து துருக்கியில் 50 ஆயிரம் இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதற்கிடையில் வட ஈராக்கிற்குள் துருக்கி இராணுவம் நுழைந்துள்ளதை ஈரானும் கண்டித்துள்ளது.

துருக்கியின் நடவடிக்கை சர்வதேச நடைமுறைகளுக்கு முரணானது என்று ஈரான் குற்றஞ்சாட்டி உள்ளது.

துருக்கிய படைகள் ஈராக்கில் இருந்து வெளியேற வேண்டும் என்று ஈரான் கோரி உள்ளது. (இ)

# நேட்டோ பயிற்சியின் போது ஹெலி கடலில் வீழ்ந்தது!

## இத்தாலிய இராணுவ அதிகாரி பலி

லண்டன், மே 27

நேட்டோ இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இத்தாலிய ஹெலிக்கொப்டர் ஒன்று மத்திய தரைக் கடலில் வீழ்ந்து நொருங்கியது.

இந்த விபத்தில் இத்தாலிய இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்; நால்வர் காயமடைந்தனர்.

கிரேக்க கப்பலில் இருந்து புறப்பட்டு பிரிட்டிஷ் கப்பலில் இறங்க முற்பட்ட போது இந்த ஹெலி கடலில் விழுந்தது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு

## இரவு முழுநேரமும் மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, மே 27

''அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு முழு இரவும் மின்சார விநியோகம் மேற்கொள்ளுமாறு நோயாளர் மற்றும் பொதுமக்கள் கோரி வருகின்றனர்.

இங்கு மின்சார விநியோகம் நள்ளிரவு ஒரு மணியுடன் நிறுத்தப்படுகின்றது.

மின்சார விநியோகம் நிறுத்தப்பட்ட பின்பு சாதாரணமான விளக்குகளை பயன்படுத்தியே வைத்தியசாலையில் கருமங்கள் நடைபெறுகின்றன.

இதனால் நோயாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

நோயாளரின் வசதியை கருத்திற் கொண்டு முழு இரவும் மின்சார விநியோகம் மேற்கொள்ளுமாறு தற்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-11)

## பனஞ்சாராயத்தின் தரம் உயர்வு

யாழ்ப்பாணம், மே 27

பனங்கள்ளில் இருந்து வடிக்கப்படும் சாராயத்தின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

பனங்கள்ளில் இருந்து சாராயம் தயாரிக்கும் திக்கம் வடிசாலையில் ஐ. நா. அபிவிருத்தி திட்ட நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வைத் தொடர்ந்து இந்த சாராயத்தின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த வடிசாலையில் உற்பத்தியாகும் ஸ்பிரிட்டின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனையின்படி தற்சமயம் தயாரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

கொழும்பில் தயாரிக்கும் சாராயத்தின் தரத்தையொட்டியதாக தற்சமயம் திக்கம் வடிசாலை சாராயமும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மதுவரித்திணைக்களத்திடம் இருந்து லைசன்ஸை பெற்று தென்னிலங்கைக்கும் இந்த சாராயத்தை அனுப்பும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வாளியால் நீரை அள்ளி ஊற்றி நடைபெறும் படகுச் சேவை!

### நெடுந்தீவு மக்களின அவலம் நீடிப்பு

நெடுந்தீவு, மே 27

நெடுந்தீவு கடல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த நெடுந்தீவு பலநோ கூ சங்கப் படகுகள் இரண்டில் ஒன்று பழுதடைந்துள்ளது மற்றது கடல் நீர் உட்புகுந்த நிலையில சேவையைத் தொடாகிறது.

கடல் நீரை வாளியினால் அள்ளி ஊற்றியபடியே சேவை இடம் பெறுவதால் பயணிகள் பலத்த கஷ்டங்களுடனும் பீதியுடனும் தமது பிரயாணத்தை மேற் கொள்கிறனர்.

அதே சமயம் வீதி அதிகார அபிவிருத்திச் சபையின் பொறுப்பில் உள்ள நெடுந்தீவு அரச படகுச் சேவை நீண்டகாலமாக ஸ்தம்பித்த நிலையில் இருக்கின்றன.

இந்தச் சேவையில் உள்ள அரச படகான குமுதினி, புனரமைப்புக்கெனவும் புதிய இயந்திரம் பொருத்துவதற்கெனவும் கடற்படையினால் பொறுப்பேற்கப்பட்டு அடித்தள வேலைகள் இடம் பெறாத நிலையில் புதிய இயந்திரம் மட்டும் பொருத்தப்பட்டு காரைநகரில் ஏனைய திருத்த வேலைகளுக்காகக் காத்து நிற்கிறது. (இ-111)

# உலகில் அழிந்து வரும் இனங்களில் 3 ஆம் இடத்தில் சிங்களவர்கள்!

### ஆணைக்குழுவில படை அதிகாரி சாடசியம்

கொழும்பு மே 27

உலகில் அழிந்து கொண்டிருக்கும் இனங்களில் முதலாவதாக எஸ்கிமோவரையும் இரண்டாவதாக செவ்விந்தியர்களையும் மூன்றாவதாக சிங்களவர்களையும் குறிப்பிட வேண்டும்.

சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகள் குறித்து விசாரணை நடத்தி வரும் சிங்கள ஆணைக்குழு முன் சாட்சியமளித்த இலங்கை தொண்டர் இராணுவப் படையைச் சேர்ந்த லெப். கேர்ணல் அனில் சுமேத அமரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பில் நடைபெற்று வரும் ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இவை இரண்டின் ஒத்துழைப்புடன்தான் ஒருநாடு சிறப்புடன் முன்னேற முடியும். ஆனால் இலங்கையில் ஆளும் கட்சி மாத்திரமே சகல அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

இன்று எமது நாட்டில் தீவிரவாதப் பிரச்சினை மட்டும் தான் உள்ளது. ஆதலால் அதை தீர்க்கும் பொறுப்பு இராணுவத்திடம் தான் விடப்பட வேண்டும்.

இன்றைக்கு வீதியில் இறங்கினால் ஐ. தே. கட்சிக்காரர்கள், சுதந்திரக்கட்சிக்காரர்கள் என்று தான்காணுகிறோமே ஒழிய சிங்களவர்கள் என்று எவரையும் காண முடியாது.

இந்த அரசு பொதுமக்களின் பணத்தில் அரசியல் தீர்வுத் திட்டத்துக்கான பிரசாரத்தை செய்து வருகிறது. அதனால் அதற்கு எதிராக குரல் கொடுக்கும் உரிமை எமக்குண்டு.

அரசு முன் வைத்துள்ள சில அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளுக்கு சிங்கள பௌத்தர்கள் என்ற முறையில் எவரும் ஆதரவளிக்க முடியாது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள பரம்பரையான சிங்களக் கிராமங்களின் பெயர்கள் மங்கி வருகின்றன. இதற்கான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன.

உதாரணமாககுரகம என்ற ஊர் குரந்தன் குளமென்றும் முல்வதுவ என்ற இடம் முல்லைத்தீவு என்றும் வெவ்னிமாவ என்றஇடம் வவுனியாவென்றும் மாற்றப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று போதிவில பொத்துவில் என்றும் கடைசியாக யாப்பாபட்டுண யாழ்ப்பாணம் என்றும் மாற்றப்பட்டிருக்கின்றன.

துட்டகைமுனு மன்னன் வெற்றிக் கொடி ஏந்திய இடமான கொடிகம கொடிகாமம் என்றும் மாறிவந்திருக்கிறது.

இப்படியான நடைமுறைகளால் வடபகுதி தனி ஒரு ஈழமாக மாறிவருகிறது. எனவே மீண்டும் எமது சிங்கள இனம் தலை நிமிர்ந்து வாழ வழி வகுக்க வேண்டும் இப்படி இவர் கூறினார். (இ- 4)

## செவிப்புலன் குறைந்தோருக்கு ஒலி வாங்கி

வலிகாமம் தெற்கு, மே 27

உடல் வலுவிழந்த மாணவர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் காதுகேட்கும் தன்மை குறைந்த மாணவர்களுக்கு பொருத்தும் ஒலி வாங்கிக் கருவி கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட உள்ளது.

ஒலி வாங்கி தேவைப்படும் மாணவர்களின் பெயர், பாடசாலை, வைத்திய பரிசோதனை அறிக்கை ஆகிய வற்றைப் பெற்று கணக்காளருக்கு அனுப்பி வைப்பதற்காக தமக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் சி. சிவராசா கோட்டக் கல்வி அதிகாரிகளைப் பணித்துள்ளார். (இ-152)

தொலைக்கல்வி ஆசிரியர் பரீட்சை

## வினாத்தாள் வந்துசேராததால் பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

யாழ். மாவட்டத்தில் தொலைக்கல்விப் பயிற்சி ஆசிரியர்களின் செயல்முறைப் பயிற்சிப் பரீட்சை அறிவிக்கப்பட்ட பிரகாரம் நடைபெறவில்லை.

யாழ். மாவட்டத்தில் தொலைக்கல்வி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரியர்களுக்கான செயல்முறைப் பயிற்சிப் பரீட்சை 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயிற்சி நிலையங்களுக்குச் சென்ற ஆசிரியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

செயல்முறைப் பரீட்சை வினாத்தாள்கள் உரியநேரத்தில் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. (இ-11)

## நாகதீபம் விகாரைக்கு விரைவில் தென் இலங்கையர்

### அமைச்சர் தர்மசிறி நம்பிக்கை

கொழும்பு, மே 27

''யாழ்ப்பாணத்திலுள்ள நாகதீபம் விகாரைக்குத் தென்பகுதி மக்கள் வெகு விரைவில் யாத்திரை மேற்கொள்ள முடியும்.''

இப்படி வெகுஜனத் தொடர்பு, விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்கா நம்பிக்கை தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளில் அரசுக்கும். எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு வரவேற்கத்தக்கது. என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-5)


# நினைவஞ்சலி


13 ஆம் ஆண்டு



அமரர்
கந்தப்பு ஸ்ரீபன்
தேவராசா (தேவா)

மலர்வு: 22 - 08 - 1946
உதிர்வு: 27 - 05 - 1984

15 ஆம் ஆண்டு



அமரர்
கந்தப்பு ஸ்ரீபன்
ஞானராசா (ஞானி)

மலர்வு: 09 - 08 - 1955
உதிர்வு: 29 - 05 - 1982

என் இரு கண்ணின் விழிகளே!
உங்களை மோட்சக் கரையில் சந்திப்பேன் என்ற விசுவாசத்துடன்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

உங்கள் அம்மா

ஸ்ரேசன் லேன்,
சாவகச்சேரி.

(47051)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 03 — 04 — 1930

உதிர்வு: 27 — 05 — 1987

அருளம்பலம் முத்துராஜா
(முன்னாள் உப தபால் அதிபர், தொண்டமனாறு.)

திதி: 05 — 06 — 1997

அன்பின் திருவுருவாய் பண்புடன் அறிவுரைகள் பல பகின்று கல்வியறிவூட்டி நல்வழிகாட்டி பாசமுடன் பிள்ளைகள் சீர்பெற்று வாழ உழைத்து அவர் தம் உயர்வுக்கு வழிகாட்டிய எம் அப்பாவே! ஐ,யிரண்டு ஆண்டுகள் கடந்தாலும் எம் நினைவலைகள் உம்முடனேயே சங்கமிக்கின்றன.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:

- குடும்பத்தினர்.

கெருடாவில்,
தொண்டமனாறு.

(47175)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வு நகலில் பல குறைபாடுகள் உள்ளன

## கலாநிதி வில்சன் அமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு, மே 27

இனப்பிரச்சினைக்கான தீர்வுஅடங்கலாக அரசமைப்புச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவரும் பொருட்டு தயாரிக்கப்பட்டு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் ஆராயப்பட்டு வரும் ''சட்ட நகலில்'' பல குறைபாடுகள் உண்டு என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

கனடாவிலிருந்து கலாநிதி ஜெயரத்தினம் வில்சன், அரசமைப்பு நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுக்கு அனுப்பிய கடிதத்தில் குறைபாடுகள் மிக விளக்கமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

''சட்ட நகலில்'' உள்ள குறைபாடுகள் நீக்கப்படாவிட்டால், நிவர்த்தி செய்யப்படாவிட்டால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முழு முயற்சியும் வீணாகி விடும் என்று கலாநிதி வில்சன் தெளிவுபடுத்தி உள்ளார்.

கலாநிதி வில்சன் அமைச்சருக்கு அனுப்பிய கடிதம் ஐந்து பக்கங்கள் கொண்டதாகும்.

அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதிகள் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

''சட்ட நகலை'' ஆராயும் போது தமிழ், முஸ்லிம் கட்சிகள் நன்றாக அலசி ஆராய்வதோடு இது விடயத்தில் ஐக்கியமாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். கலாநிதி வில்சன் தந்தை செல்வநாயகத்தின் மருகர் என்பது தெரிந்ததே. (அ)

# விசாகா, றோயலுக்கு சிறந்த பெறுபேறுகள்

கடந்த வியாழக்கிழமை யன்று கொழும்பில் வெளியான ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகள் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளன.

விசாகா மகளிர் வித்தியாலயத்தில் 112 பேர் 8 பாடங்களில் 'டி' பெற்றுள்ளனர். 83 பேர் 7 பாடங்களில் 'டி' பெற்றுள்ளனர்.

கொழும்பு றோயல் கல்லூரியில் 98 பேர் 8 பாடங்களிலும் 106 பேர் 7 பாடங்களிலும் 'டி' பெற்றுள்ளனர்.

தேவி பாலிகா வித்தியாலயத்தில் 86 பேர் 8 பாடங்களிலும் 63 பேர் 7 பாடங்களிலும் 'டி' பெற்றுள்ளனர்.

ஆனந்தா கல்லூரியில் 29 பேரும் நாலந்தாக் கல்லூரியில் 23 பேரும் 8 பாடங்களில் 'டி' பெற்றுள்ளனர். (இ-10)

# கரவெட்டிப் பகுதிக்கான நீர் விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 27

கரவெட்டிப்பகுதியில் பெரும்பாலான மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தமக்கு வேண்டிய குடிதண்ணீரைப் பெற அவர்கள் இரண்டு மூன்று மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

நன்னீர்க் கிணறுகள் அரிதாக உள்ள இப்பகுதியில் நீர் விநியோகத்துக்கென அத்துளு என்ற இடத்தில் அமைந்திருக்கும் நன்னீர்க் கிணற்றிலிருந்து குழாய் நீர் விநியோக முறையில் நீர் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது கடந்த இரு வாரங்களுக்கு மேலாக இந்நீர் விநியோகத்துக்குரிய தண்ணீர் தாங்கிக்கு நீர் நிரப்ப பயன்பட்டு வந்த நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்த நிலையில் இருப்பதாலேயே, அங்கு மக்கள் தண்ணீர் பெற முடியாதுள்ளது. (ஐ-15)

# ஆள்கள் இல்லாத வீடுகளில் கதவு, யன்னல்கள் அபகரிப்பு

கொக்குவில் பகுதியில் குடியிருப்பாளர்கள் இல்லாதவீடுகளின் கதவுகள், யன்னல்கதவுகள் என்பன இரவோடு இரவாக அபகரிக்கப்பட்டு வருகின்றன.

ஊரடங்கைப் பயன்படுத்தி இரவு வேளைகளில் இத்திருட்டுச் செயலில் விஷமிகள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

நந்தாவில்ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த புதனன்று வாயில் கதவுகளும், அலுமாரிக் கதவுகளும் கழற்றி எடுக்கப்பட்டுள்ளன.

இரவு நேரத்தில் சத்தம் கேட்டாலும் அயலில் உள்ளோர் வீடுகளை விட்டு வெளியே வர அஞ்சுகின்றனர். இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். (ஐ-4)

# மிருசுவில், உசன், கொடிகாமம் பகுதிகளுக்கும் மின் கிடைத்தது

தென்மராட்சிப் பிரதேசத்தில் மிருசுவில், உசன் பகுதிகளுக்கும், கொடிகாமத்தில் கச்சாய் வீதி, பருத்தித்துறை வீதி, கோவிலாமனை ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகம் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டுள்ளது.

மிருசுவில் அரசினர் வைத்தியசாலை வளவில் பொருத்தப்பட்டுள்ள 80 கே. வி வலுவுள்ள ஜெனரேட்டர் மூலம் இப்பகுதிகளுக்கு மின் வழங்கப்படுகிறது.

மின் விநியோகத்தை தொடங்கிவைக்கும் சம்பிரதாய பூர்வ நிகழ்வு மிருசுவில் வைத்தியசாலை டாக்டர் எஸ். தம்பாத்துரை தலைமையில் நடைபெற்றது. வடபிரதேச இலங்கை மின்சார சபை முகாமையாளர் எஸ். இராஜேந்திரம் ஆரம்பித்துவைத்தார். இவ் வைபவத்தில் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பிரதேச மின் அத்தியட்சகர் வே. சடாச்சரமூர்த்தி உட்பட இலங்கை மின்சாரசபை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இப்பகுதிக்கான மின்வழங்கலுக்காக ஏற்கனவே சேதமுற்றும், காணாமற்போயும் இருந்த மின்கம்பிகள், மின் தூண்கள் என்பன மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தால் மீள அமைக்கப்பட்டன. இம் மின் விநியோகத்தைப் பெற ஏதுவாக மின் பாவனையாளர்கள் தமது வீட்டுமின் சுற்றுகளை சீர்செய்து வந்தனர். இதன் அடிப்படையில் இப்பகுதியில் சுமார் நூறு வீடுகளுக்கு மின் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சில வீடுகளுக்கு மின்வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக மின்சார சபையினர் தெரிவித்தனர்.

இதே வேளை - மின்சாரத்தைப் பெறுபவர்கள் [illegible] மாக பாவிக்கும்படி வலியுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-31)

# காய்ச்சலால் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 27

காய்ச்சலால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த இருவர் கடந்த வெள்ளியன்று மரணமடைந்தனர்.

கடந்த 20 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டவரான உரும்பிராயைச் சேர்ந்த சிவானந்தன் கலாமணி (வயது 39) (இவர் உரும்பிராய் றோமன்கத்தோலிக்க பாடசாலை உதவி அதிபராவார்) என்பவரும் கடந்த வெள்ளியன்று காலை அனுமதிக்கப்பட்டவரான அல்வாய் தெற்கைச் சேர்ந்த ரி. சத்தியநேசன் (வயது 27) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர். (ஐ-15)

# மொறவெவ கிராமவாசிகளுக்கு துப்பாக்கிகள் வழங்க முடிவு

திருமலை மாவட்டம் மொறவெவ பகுதி கிராமவாசிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இப்பகுதியைச் சேர்ந்த 100 பேர் ஊர்காவற் படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மொறவெவ பகுதி பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அப்பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி தலைமையில் நடந்த மாநாட்டில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மொறவெவ பொலீஸ் நிலையம் கடந்த 12 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதை அடுத்து அப்பகுதி கிராமவாசிகள் மத்தியில் பீதி நிலவி வருகிறது.

இவர்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்காக துப்பாக்கிகளை வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-150)

# குடாநாட்டு மக்களுக்கு வங்கிகள் மூலம் கடன்

## வெள்ளியன்று கொழும்பில் மாநாடு

குடாநாட்டில் உள்ள மக்களுக்கு கடன் வழங்குவது தொடர்பாக ஆராயகொழும்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு மீளத் தொழில் ஆரம்பித்தல் மற்றும் விவசாய அபிவிருத்தித்திட்டங்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குவது தொடர்பாக ஆராயப்படும்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கி அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பின்தங்கிய பகுதிகளில் குடிதண்ணீர் வசதி

## யுனிசெவ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 27

குடாநாட்டில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் செயல்திட்டம் ஒன்றை 'யுனிசெவ்' அமைப்பு நடைமுறைப்படுத்த இருக்கிறது.

சாவகச்சேரி, உடுவில், பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் உள்ள குழாய் நீர்க்கிணறுகளையும், திறந்த கிணறுகளையும் சுத்திகரித்து திருத்த அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இவ்வகையில் 52 கிணறுகளைப் புனரமைக்க அந்த அமைப்பு முன்வந்துள்ளது.

திறந்த கிணறுகள் சிலவற்றை அமைக்கவும் அந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

# ஐ. நாவின் உதவியுடன் விரைவில் 40 திட்டங்கள்

## குடாநாட்டில் செயற்படுத்த நடவடிக்கை

குடாநாட்டில் உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 40செயல் திட்டங்களை ஐ. நா. அபிவிருத்தி திட்ட அமைப்பு இனங்கண்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு, விவசாயம், சுயதொழில் வாய்ப்புக்கான சிறுதொழில் ஆகியனவற்றை அபிவிருத்தி செய்யும் வகையில் இத்திட்டங்கள் அமைந்துள்ளன.

அந்த அமைப்பின் நிபுணர்குழு ஒன்று குடாநாட்டில் பல பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் இத்திட்டங்களை வகுத்துள்ளது.

மக்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் வகுக்கப்பட்டுள்ள இத்திட்டங்கள் அந்த அமைப்பின் உயர் மட்டத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் முழுவதற்கும் அங்கீகாரம் கிடைக்காது விட்டாலும், குறிப்பிட்ட சில திட்டங்களுக்காவது அங்கீகாரம் கிடைக்கும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# புகைப் பொருள் எதிர்ப்புத் தினம்

வட மாநில நல்லொழுக்க சம்மேளனம் புகைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை இம்மாதம் 31 ஆம் திகதி சண்டிலிப்பாயில் கொண்டாடுகிறது. (இ-173)

# நெடுந்தீவில் ஆலயம் புனரமைப்பு

கடந்த 25 வருடங்களாக உற்சவங்கள் நடைபெறாது இருந்த நெடுந்தீவு மத்தி பெருக்கடி பிள்ளையார் கோயிலைப் புனரமைத்து மீண்டும் உற்சவங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

மேற்படி ஆலயத்திற்கென நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் [illegible] தலைமையில் பதின்மூன்றுபேர்கள் கொண்ட பரிபாலன சபை தெரிவானது. (இ-111)

# தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவி சாத்தியம்

## பேராயர் ஜெபநேசன் தகவல்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்கம் மரபுவழி தமிழ்க் கல்வியை வளர்ப்பதில் ஈடுபாடு காட்டுவது வரவேற்கத்தக்கது. இந்தப் பணிக்கு வெளிநாடுகளிலிருந்து உதவிகள் பெறக்கூடிய சாத்தியம் உண்டு.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் அண்மையில் நடந்த சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் தென் இந்திய திருச்சபை பேராயர் அதி. வண. சு. ஜெபநேசன் இவ்வாறு கூறினார்.

சங்கப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணக் கல்வி வலயம் I இன் கல்விப் பணிப்பாளரும் ஆ. தி. பா ச. தலைவருமான சு. இரத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

நீண்ட காலம் செயலற்றிருந்த இச்சங்கத்தின் செயற்பாடுகளுக்குப் புத்துயிர் வழங்கும் வகையிலே சங்கத்தின் பழைய புதிய அலுவலர்கள், உறுப்பினர்கள் பலரும் வருகை தந்திருந்தனர்.

செயற்குழுவின் பழைய உறுப்பினரோடு தற்காலிக உறுப்பினரும் பொருளாளரும் இச் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் தெரியப்பட்டதோடு சங்க அமைப்பு விதிகளைத் திருத்தியமைக்கப் பேராயர் ஜெபநேசன் தலைமையில் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

பிரவேச, பால பண்டித வகுப்புக்களை இம் மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி ப. 3 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் தொடங்குவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ஒட்டோவும், ஒற்றை மாட்டு வண்டிலும் விற்பனைக்கு உண்டு. (M-A-M) மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய். (47170)

'றலி' No.1 சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கே. சிவமணி, 213, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [47177]

### தவறிவிட்டது

சின்னராசா செந்தூரன் (கந்தரோடை மேற்கு சுன்னாகம்) என்பவரது விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு. சின்னராசா, புதைபொருள் நிலைய அருகாமை, கந்தரோடை என்ற முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [47244]

வெற்றிவேலு ஜெயதீபன் என்பவருடைய விசேட அடையாள அட்டை மனோசரா தியேட்டருக்கும், பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் மனோகரா தியேட்டரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [47174]

கைச்சங்கிலி ஒன்று ஸ்ரான்லி வீதிக்கும், ஆரியகுளம் சந்திக்கும், செல்வா திரையரங்குக்கும் இடையில் 25-05-97 அன்று தவறிவிட்டது. கண்டுடெடுத்தவர்கள் யாழ். கச்சேரி நலன்புரிச்சங்கத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [47187]

### வகுப்புக்கள்

தலை அலங்காரம், பூவேலை, தையல், ஐசிங் வகுப்புக்கள் 14-6-97 பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. P. சுவர்ணசிறி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, சான்றிதழ்கள் வழங்கப்படும். [47150]

### மணப்பெண் தேவை

32 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற, மகம் நட்சத்திரமுடைய பிரான்சில் தொழில்புரியும் மணமகனுக்கு படித்த, அழகுடைய, இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கவில்லை. தொடர்பு: துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [47178]

### புத்தகப்பிரியர்களே!

புதிய தமிழ் வெளியீடுகள் ஏராளம்; வாருங்கள்; பாருங்கள்! எடுத்து வாசியுங்கள், அறிவைப்பெருக்குங்கள். லிங் லெண்டிங் லைபிரறி Ling Lending Library, (41, தபாலக வீதி, சாவகச்சேரி). [47099]

### குத்தகைக்கு

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளியில் கருந்தளிப் பகுதியிலுள்ள 25 பரப்பு நெற்காணியும் சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள 18 பரப்பு நெற்காணியும் இவ்வருடம் (1997) காலபோக நெற்செய்கைக்கு குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ளது. தொடர்பு; தி. அமிர்தலிங்கம் ஆசிரியர், ஒட்டுவெளி. (சி-784)

## ப. நோ. கூ.ச கிளைகள்

அச்சுவேலி, மே 27

வலிகிழக்கு வடபகுதி அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வாதரவத்தைக் கிளை, புத்தூர்கிழக்கு கிளை என்பன மீண்டும் செயற்படுகின்றன.

இடைக்காலத்தில் இரண்டு விற்பனை நிலையங்களும் மூடப்பட்டு புத்தூரில் செயற்பட்டு வந்தன. (இ-11)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் புதியவார்ட்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் 10 லட்சம் ரூபா செலவில் புதிய வார்ட் அமைக்கப்படுகின்றது.

120 அடி நீளமான புதிய நோயாளர் தங்குமிடம் 24 கட்டில்கள் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. (இ-11)

## 26 பேருக்கு தையல் இயந்திரங்கள்

பளை தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் 26 யுவதிகளுக்கு தையல் இயந்திரங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்து வெளியேறவுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகளுக்கு வங்கிக் கடன் மூலம் தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை – இப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவோருக்கு கொழும்பு விலையில் தையல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## விசா இன்றி பயணம்

இவ்வாண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி ஹொங்கொங்கின் நிர்வாகம் சீனாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாகச் சீன அரசுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

இதன்படி சீனாவின் நிர்வாகத்திற்குட்பட்ட ஹொங்கொங்கிற்குச் செல்ல சிறிலங்கா பிரஜைகளுக்குஜூலை முதலாம் திகதியில் இருந்து விஸா தேவையில்லை. அதேபோன்று ஹொங்கொங் கடவுச் சீட்டுகளை வைத்திருப்போர் சிறிலங்கா வர 'விஸா' பெறவேண்டியதில்லை.


யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
(சாந்தி சினிமா முன்பாக)
வகுப்பு 5 - 10, O/L
Spoken English With Grammar, சிங்களம்,
Shor t-hand, Typing
(இரு மொழிகள் மூலமும்) கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 28 - 05 - 97
(47179) - நிர்வாகி


உ
சிவமயம்

## இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.

முன்னாள் திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைத் தலைவரும்,
முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபருமான,
சித்தாந்த வித்தகர், சைவப் பெரியார்

### திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களின்
### முதலாம் ஆண்டு ஞாபகார்த்த விழாவும்
"இந்து தர்மம்" - மலர் 13
(ஞானப்பிரகாசம் சிறப்பிதழ்)
### வெளியீட்டு விழாவும்

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கு
நாள்: 28-05-1997 புதன்கிழமை மு. ப. 9. 30 மணி
தலைவர்: அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

★ நிகழ்ச்சி நிரல் ★

1. மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தல்.
   பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
   (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
2. தேவாரம்: திரு. நா. வி. மு. நவரத்தினம்
   (விரிவுரையாளர், இசைத்துறை- யாழ். பல்கலைக்கழகம்)
   திருவுருவப்படம் திரை நீக்கம் செய்தல்!
   திரு. செ. பத்மநாதன் (யாழ். அரசாங்க அதிபர்)
3. வரவேற்புரை! திரு. ஆ மகாலிங்கம்
   (உப தலைவர், இந்து சமயப் பேரவை)
4. ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக- ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
   (நல்லை ஆதீனம்)
   மஹாராஜஸ்ரீ சு. து ஷண்முகநாதக் குருக்கள்
   (மாவை ஆதீனம்)
5. வாழ்த்துரை: திரு. செ. பத்மநாதன்
   (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)
6. தொடக்கவுரை!
   பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
   (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
7. ஞாபகார்த்தவுரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
   (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
8. சிறப்புரை:
   திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
   (தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபை)
9. வெளியீட்டுரை:
   பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
   (தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)
10. மலராசிரியர் பதிலுரை: பண்டிதர் மு. கந்தையா
   (பிரதம ஆசிரியர், இந்துதர்மம்)

முதற் பிரதி பெறுவோர்:

1) கலாநிதி S. யோகராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத்துறை)
2) டாக்டர் பே. பத்மநாதன்
3) திரு. P. கனகசபாபதி (தலைவர், நல்லூர் பல நோ. கூ. சங்கம்)
4) திரு. சி. குமாரவேல் (தலைவர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்)
5) சிற்பகலாநிதி ஆ. சீவரத்தினம் (ஆச்சாரியர்)

நன்றியுரை: திரு. சு. சிவபாலன்
(பொருளாளர், இந்து சமயப் பேரவை)
தேவாரம்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

சி. சக்திகிரீவன் — செயலாளர்
சீ. விநாசித்தம்பி — தலைவர்

(சி/786)

# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — ஐந்தாம் ஆண்டு



அமரர்
**அந்தோணிப்பிள்ளை பெனடிக்ற் செல்லத்துரை**
மலர்வு: 13 - 06 - 1914 உதிர்வு: 27 - 05 - 1996

அன்புடன் எமை வளர்த்து
ஆளாக்கி மண்மீது
பண்போடு வாழ வைத்த
பாசமிகு ஐயாவே!
மண்ணோடு நீங்கள்
மறைந்தாலும் எம் மனதில்
நிறைந்திருக்கும் உங்கள்
நினைவென்றும் மறையாது.

திருமதி
**பெனடிக்ற் எலிஸ்ரேலியா**
மலர்வு: 20 - 02 - 1922 உதிர்வு: 09 - 02 - 1992

ஆண்டுகள் பல சென்றாலும்
அழியாத ஓவியமாய்
நிலையாகி விட்டதம்மா - எம்
நெஞ்சங்களில் உங்கள் நினைவு.
ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
அன்னையே! அஞ்சலிகள்
செய்கின்றோம் இதயங்களால்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

பெ. செபஸ்ரியன்,
கடற்கரை வீதி,
தாளையடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முன்பள்ளிகள்

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த வாரம் முன்பள்ளிகளின் — பாலர் பள்ளிகளின் — அபிவிருத்தி சம்பந்தமாக முழு நாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

கல்விமான்கள், வைத்தியர்கள், நிர்வாகிகள் என்று பல தரப்புகளையும் சேர்ந்தவர்கள் குடாநாட்டில் முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாகத் துறைசார்ந்த கருத்துக்களை அங்கு முன்வைத்தனர்.

ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என்று கல்விப் போதனையில் பல படிகள் இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் அத்திவாரமாக அமைவது பாலர் கல்வியே.

மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையான காலத்தில் குழந்தையின் உள, உடல் வளர்ச்சி உறுதியானதாக அமைய வேண்டும். அந்தக் காலத்திலேயே குழந்தை உலகத்தையும், இயற்கையையும், தன்னைச் சுற்றியுள்ள சூழலையும் மெதுமெதுவாக உணரத் தொடங்குகிறது— அறியத் தொடங்குகிறது. அந்தப் பருவத்தில் குழந்தைக்கு எல்லாமே புதியனவாகவும், புதுமையானவையாகவும் இருக்கின்றன. புதிதாக அறிந்து கொள்வதில் ஆர்வம் அதிகம் உள்ள பருவமும் அதுவே.

ஆகையால் பிள்ளைகளைச் சரியான முறையில் வழி நடத்தி அவர்களின் உள, உடல் வளர்ச்சிக்கு தூண்டுதலாக இருந்து உதவ வேண்டும். இந்தப் பருவம் கள்ளமில்லாத வெள்ளை மனம் பூரித்துப் பொலிவடையும் காலம். அதனை மாசுபடுத்தாமல் நல்வழிக்கு இட்டுச் சென்று அவர்களின் நல் வாழ்க்கைக்கு உறுதியான அத்திவாரம் அமைக்கப்பட வேண்டும். குழந்தைகளின் குணவியல்புகள், பழக்க வழக்கங்கள், புத்திக் கூர்மை என்பன தூண்டப்படுவதும் வடிவமைக்கப்படுவதும் இக்காலத்திலேயே.

இந்தப் பணியில் பெரும் பகுதியைப் பெற்றோரும் கணிசமான பகுதியை முன்பள்ளி ஆசிரியர்களுமே ஆற்ற வேண்டும்.

எனவே முன்பள்ளிகள் சிறந்த முன்னோக்குடைய நற்பிரசைகளை உருவாக்கும் இலக்குடன் ஒரு கட்டமைப்புக்கள் கொண்டுவரப் படவேண்டும். முன்பள்ளிப் போதனைக்குரிய வளங்கள் கொண்டவையாக பாலர் பாடசாலைகள் இயங்கவேண்டும். போதனை முறைகள், பாடவிதானங்கள் என்பன பள்ளிக்குப் பள்ளி வேறுபடாமல் ஒருசீரமைக்கப்பட வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உகந்த தக்க சிறந்த பயிற்சி வழங்கப்படுவது அவசியம். அவர்களுக்கு நியாயமான வேதனமும் வழங்கப்படவேண்டும்,

முன்பள்ளிப் போதனை மிகவும் பொறுப்பு வாய்ந்த சமூக நலப் பணி. தூர நோக்குடனும், காலத்தின் தேவையைக் கருதியும், சமூக மேம்பாட்டை இலக்கு வைத்தும் இச்சேவை அமைய வேண்டும்.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். ஆகையால் இப்பணி பக்தியுடனும், பற்றுடனும் தொண்டாகச் செய்யப்பட வேண்டிய தெய்வீகப் பணியுமாகும்.

# இலங்கை நிலைவரம் தொடர்பாக

# நோர்வேயில் நாளை மாநாடு

கொழும்பு, மே 27

இலங்கையில் இடம்பெறும் வன்செயல்கள் மற்றும் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக நோர்வேயின் பேர்ஹென் (Bergen) நகரில் நாளை மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

சி. எம். ஐ. என்ற கிறிஸ்தவ அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸிலின் பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளனர்.

மேற்கு நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை அங்கு நிலவுவதாகத் தெரிவிக்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகளும்—

இலங்கையில் நிலைமை மோசமாக உள்ளதால் அங்கு அகதிகளை திருப்பி அனுப்பக்கூடாது என தெரிவிக்கும் பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் பிரதிநிதிகளும் — இந்த மாநாட்டில் பங்குபற்றிக் கலந்துரையாட இருப்பது முக்கிய அம்சம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

''பிராவ்டா'' ஏட்டின் ஆசிரியரான சாள்ஸ் அபயசேகரா இலங்கையில் இருந்து இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

''யுத்தத்தின் தாக்கங்களும் இலங்கையில் இடம்பெறும் பொதுமக்கள் மனித உரிமை மீறல்களும்'' என்ற தலைப்பில் அவர் அங்கு உரையாற்றவிருக்கிறார்.

நோர்வே கிறிஸ்தவ மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அரி நாஸஸ் (Arenaes s) ''நோர்வே அகதிகள் நிலை மற்றும் இலங்கையும் அகதிகள் கொள்கையும்'' என்னும் தலைப்பில் உரையாற்றவிருக்கிறார். அண்மையில் இலங்கை வரவிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் இவர் இடம்பெற்றிருந்தார். இக்குழு இலங்கை வர கடைசி நேரத்தில் 'விஸா' மறுக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

''இலங்கை தொடர்பான நோர்வேயின் நிலைப்பாடு'' என்றும் தலைப்பில் ஜியர் லுப்விக்சன் (Geir Lubvigsen உரையாற்றுவார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சார்பில் கிறோமிஸ்ஸுமோரி (Hiromitsu mori) உரையாற்றுவார்.

பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் சார்பில் மல்க்கம் றொட்ஜர் இம்மாநாட்டில் உரையாற்றுவார்.

(ஐ-150-3)

## மனித உரிமைகள் நிலை பற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, மே 27

மனித உரிமைகள் நிலைவரம் குறித்து நேரடியாக ஆராய அண்மையில் இலங்கை வந்திருந்த நோர்வே நாட்டைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் தமது இலங்கை விஜயம் குறித்து இன்று நோர்வேயில் கூட்டும் செய்தியாளர் மாநாட்டில் விளக்கவிருக்கின்றனர்.

நோர்வேயில் தஞ்சம் கோரிய 280 இலங்கையரை நாட்டுக்குத் திருப்பியனுப்ப நோர்வே அரசாங்கம் முடிவு செய்ததைக் கண்டித்து வரும் ''தஞ்சங் கோருவோர் நோர்வே அமைப்பு'' என்ற அரச சார்பற்ற அமைப்பின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்ப அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இக்குழுவினர் இங்கு வர ''விஸா'' மறுக்கப்பட்டதையடுத்து இந்த அமைப்பின் இரு பிரதிநிதிகள் மட்டும் இலங்கை வந்திருந்தனர்.

கொழும்பு, வவுனியா மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்த இந்தப் பிரதிநிதிகள் ஒரு வாரம் இலங்கையில் தங்கியிருந்து நிலைமையை ஆராய்ந்தபின் நோர்வே திரும்பியது:

இலங்கை நிலைவரம், அகதிகள் நிலை, மனித உரிமை மீறல்கள் ஆகியன குறித்து இன்று கூட்டும் செய்தியாளர் மாநாட்டில் இவர்கள் விளக்கவுள்ளனர்.

இலங்கை நிலைவரம் குறித்து இவர்கள் தயாரித்த அறிக்கை ஒன்றை நாளை நடைபெறவுள்ள மாநாட்டிலும் இவர்கள் சமர்ப்பிப்பர்.

### இலங்கைவர அனுமதி மறுக்கப்பட்ட

## நோர்வே குழுவுக்கு அரசு அழைப்பு

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி மறுக்கப்பட்ட நோர்வே நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட தூதுக் குழுவை மீண்டும் அனுப்பிவைக்குமாறு இலங்கை அரசு தற்போது நோர்வே அரசைக் கோரியுள்ளது.

நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இத் தூதுக்குழு இம் மாத ஆரம்பத்தில் இலங்கை வர 'வீஸா' கோரியதும் —

அச்சமயம் மாலைதீவில் நடந்த ''சார்க்'' நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள வெளிவிவகார அமைச்சர் மாலைதீவு சென்றிருப்பதைக் காரணம் காட்டி அவர்களுக்கு அரசு 'வீஸா' வழங்காததும் தெரிந்ததே.

தற்சமயம் வெளிவிவகார அமைச்சர் நாட்டில் இருப்பதால் அந்தக் குழுவை மீண்டும் அனுப்புமாறு இலங்கை அரசு நோர்வேயைக் கேட்டுள்ளது.

''இலங்கையில் நாம் வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்கப் போகவில்லை. அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி தளநிலையை அறியவே அங்கு செல்லவிருந்தோம்'' என்று அந்த நாடாளுமன்றக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-150 3)

## வவுச்சர்கள் வந்து 2வாரமாகியும் இன்னும் ஓய்வூதியம் இல்லை

### அரச அதிபரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம் மே. 27

உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் இந்த மாதத்துக்கான வவுச்சர்கள் கிடைத்து இரண்டு வாரங்கள் ஆகியும் வங்கிகளில் அதற்குரிய பணத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளுக்கு ஓய்வூதியர்களின் பட்டியலும் காசோலைகளும் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையே இதற்குரிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வட மாநில ஓய்வூதியர் சம்மேளனம் யாழ் அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது:

தபால் சேவை முழுமையாக வழமைக்குத் திரும்பும் வரை ஏற்கனவே அமுலில் இருந்துவரும் நடைமுறையை தொடர்ந்து அமுல் செய்து உதவுமாறு ஓய்வூதியர் சம்மேளனம் அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ-4)

### நாளை

**வைகாசி 14**

புதன்கிழமை

திதி: ஷஷ்டி

காலை 5.56 வரை.

ஸப்தமி

பின் இரவு 3.31 வரை:

நட்சத்திரம்: அவிட்டம்

பின் இரவு 1.39 வரை.

அக்கினி நாள் முடிவு

சுபநேரம்: 4. 22 – 5.52

ராகுகாலம்: 11.52-1.22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நூல்கள் வாங்க நிதி

வலிகாமம் தெற்கு, மே 27

கோட்டக்கல்வி அலுவலகங்களூடாக தெரிவு செய்யப்படும் பாடசாலைகள் நூல்களைக் கொள்வனவு செய்ய கல்வித்திணைக்களத்தால் நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

உடுவில் கல்விக்கோட்டத்தில் உள்ள இணுவில் மத்திய கல்லூரிக்கும், ஏழாலைமகா வித்தியாலயத்துக்கும் நூலக நூற்கொள்வனவுக்கென தலா 5 ஆயிரத்து 250 ரூபா கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

(இ-152)

## 2 கப்பல்கள் பொருள்களை இறக்குகின்றன

வடமராட்சி, மே 27

பருத்தித்துறை துறைமுகத்தில் ஒரே நேரத்தில் இரு கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

மாஹோறா, டோனாகுளி ஆகிய இரு கப்பல்களிலிருந்தும் குத்தரிசி, சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், சோடாவகைகள், சாராயம் போன்ற பொருள்கள் இறக்கப்படுகின்றன.

மேலும் இரு இழுவைப் படகுகள் (பாஜ்) வந்து சேர்ந்துள்ளதாலேயே ஒரே நேரத்தில் இரு கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கக்கூடியதாக உள்ளது.

(இ-173)

## கம்போடியாவில் கண்ணியில் சிக்கி பருத்தித்துறை வாலிபர் மரணம்

கொழும்பு, மே 27

ஈழத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டில் மட்டுமன்றித் தாம் செல்கின்ற ஏனைய நாடுகளிலும் பல்வேறு அவலங்களைச் சந்திக்க நேர்வது சகஜமாகிவிட்டது.

கம்போடியா நாட்டில் நடைபெற்ற சம்பவம் ஒன்று இதனையே வேதனையுடன் உணர்த்தியுள்ளது.

கம்போடியாவில் 'கெமரூச்' போராளிகள் புதைத்து வைத்திருந்த நிலக்கண்ணியில் ஈழத் தமிழர்கள் இருவர் பயணம் செய்த கார் ஒன்று சிக்கியதில் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். மற்றவர் படுகாயமடைந்தார்.

இந்த இரு தமிழர்களும் வேலைவாய்ப்புத் தேடி கம்போடியாவுக்குச் சென்றிருந்தனர் என்றும் — கம்போடியா தலைநகரில் இருந்து கடந்த சனியன்று இவர்கள் பயணம் செய்த கார் வழிமாறி 'கெமரூச்' போராளிகளின் பகுதிக்குள் சென்ற வேளை இந்த அனர்த்தம் இடம்பெற்றதாகத் தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறை சந்தை மேற்கைச் சேர்ந்த நடராசா செல்வேந்திரன் (வயது 28) என்ற இளைஞரே இச்சம்பவத்தில் உடல் சிதறிப் பலியானார்.

காயமடைந்த மற்றைய தமிழர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் இறந்தவரின் சடலம் அடையாளம் தெரியாமல் சிதறிப் போனதால் சடலத்தை இலங்கைக்கு அனுப்ப முடியாது போனதாக கொழும்புக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## கோழி வளர்ப்போர் கைவிடும் நிலையில்!

### கோழித்தீன் விலை உச்சம்

வலிகாமம் தெற்கு, மே 27

கோழிகளுக்குத் தேவையான உணவு வகைகள் யாழ்ப்பாணத்தில் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதால், கோழி வளர்ப்போர் தமது முயற்சியைக் கைவிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கோழியுணவு 50 கிலோ கொண்ட ஒரு பைக்கட் ஆயிரத்து 300 ரூபாவுக்கு யாழ்ப்பாணக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் கோழி முட்டை ஒன்றின்விலை 7ரூபா 50சதம் முதல் 8.00 ரூபா வரையே காணப்படுகின்றது.

அதிகப்படியான விலை கொடுத்து கோழி உணவை வாங்கி குறைந்த விலையில் முட்டைகளை விற்பதால் கோழி வளர்ப்பில் எதிர்பார்த்த இலாபத்தைப் பெற முடியாதிருப்பதாக கோழி வளர்ப்போரால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கோழியுணவு தட்டுப்பாட்டால் பலர் வளர்ப்புக் கோழிகளை விற்று வருகின்றனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இவ்வருடம் பெப்ரவரிமாதம் வரை யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியர் பிரிவு சுமார் ஒரு லட்சம் கோழிக்குஞ்சுகளை விமானம்மூலம் கொண்டு வந்து யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கியுள்ள போதிலும் கோழி உணவுத்தட்டுப்பாட்டால், எதிர்பார்த்த அளவு முட்டை உற்பத்தி கிடைக்குமா என தற்போது சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரை உடன் நிறுத்துமாறு

# ஜனாதிபதிக்கும் பிரபாகரனுக்கும் 5 தமிழ்க் கட்சிகள் வேண்டுகோள்

## கூட்டாகப் பொது அறிக்கைவிட முடிவு

கொழும்பு, மே 27

பொதுமக்கள் மிகவும் பாரிய அளவில் பாதிக்கப்படுவதைக் கருத்திற்கொண்டு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உடனடியாகப் போரை நிறுத்திக்கொள்ள முன்வரவேண்டும்.

இவ்வாறு ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் கோரிக்கை விடுக்குமுகமாக ஒரு பொது அறிக்கையினை வெளியிடுவது என்றும் 5 தமிழ்க் கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி., ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய ஐந்து தமிழ்க்கட்சிகளும் கடந்த ஞாயிறன்று கொழும்பில் கூடி இவ்வாறு முடிவெடுத்தன.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சுமார் மூன்றரை மணிநேரம் கூடிப் பேச்சு நடத்தினர்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனைகளின் போது பெரிதாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து இப் பேச்சுவார்த்தையின் போது தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மன்னார் வீதிஊடாகவே இனி போக்குவரத்து

தற்போதைய இராணுவ நடவடிக்கை மூலம் வவுனியா—கிளிநொச்சி நெடுஞ்சாலை படையினரால் கைப்பற்றப்படும் வரை—

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கான சகல போக்குவரத்துகளும் இனிமேல் வவுனியா—மன்னார் வீதி ஊடாகவே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் வவுனியாவுக்கான போக்குவரத்து தாண்டிக்குளம் பகுதி ஊடாக நடைபெற்று வந்தது தெரிந்ததே.

தற்போதைய பயணப் பாதையான வவுனியா—மன்னார் வீதியில் பறையனாலங்குளம் பகுதி பிரதான சோதனைத் தடை முகாமாக இயங்கிவருகிறது.

(ஐ-21-10-164)


அமரர் பேராசிரியர்

அ. துரைராசாவின்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

திகதி: 11-06-1997 புதன்கிழமை

நிகழ்ச்சி: காலை 10-00மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் சங்காபிஷேகம். பிற்பகல் 2-30 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் அஞ்சலிக் கூட்டம்.

தலைவர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

அன்னாருக்கு நாதாஞ்சலியும் இடம்பெறும்.

ச. க. தனேந்திரன்

(47187) யாழ். பல்கலைக்கழகம்.

எமது புதிய வெளியீடு!

விக்ரம் நடித்த

பூ ஒன்று புலியானது

எமது ஒறிஜினல் வெளியீடுகள்

செண்பகம் எஜமான்

சிவசங்கரி ஆணழகன்


சாமுண்டி பாண்டியன்

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(47195)

6 ஆம் அண்டு நினைவஞ்சலி


மலர்வு: 15 — 10 — 1936

உதிர்வு: 03 — 06 — 1991

அமரர் க. தியாகராஜா

(ஓய்வு பெற்ற M. L. T)

திதி: 27 — 05 — 1997

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே—உம் குழந்தைகளின் சிறப்பைக் காணாது பாதிவழியில் எமைப் பிரிந்தீர்—உமை ஒரு யுகத்தில் காண நாடி நிற்கிறோம் பகவானின் திருப்பாதங்களை.

உங்கள் அன்பான

1ஆம் கட்டை, உடுவில். மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

(47246)


## ரெலோ உறுப்பினர் சுடப்பட்டார்

வாழைச்சேனை நகரப் பகுதியில் றொபேர்ட் என்ற ரெலோ உறுப்பினர் ஒருவர் நேற்று நண்பகல் சுடப்பட்டார். அவர் படுகாயமுற்றார்.

புலிகளே இவரைச் சுட்டதாக சந்தேகிக்கப்பட்டது.

### தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமாக ஆயுதங்கள் கொண்டுவருவதைத் தடுப்பதற்காகவும் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

### வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வடிக்கை ஆரம்பித்தகையோடு இராணுவம் தோல்வியைச் சந்திக்க நேர்ந்துள்ளது. 14 படையினர் பலியாகினர். ஐம்பதுக்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர். இரு படை வாகனங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இந்த நிலைமை காரணமாக முதலாம் கட்ட நடவடிக்கையை விட இரண்டாம் கட்ட நடவடிக்கை மிக மந்த கதியை அடைந்துள்ளது.

திங்களன்று (நேற்று) மோதல்கள் இடம்பெறவில்லை — என்றார்.

இதற்கிடையில் —

விடுதலைப் புலிகளின் அசாத்திய தாக்குதல்களைச் சந்தித்துள்ள இலங்கை இராணுவம் நேற்று நகர முடியாமல் நிறுத்திவைக்கப்பட்டதாக ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது.

### ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்)

னந்த பெரேராவுக்கு கொட்டாஞ்சேனை டென்லூசியஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் திருமணம் நடந்தது.

அத்திருமண வைபவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும், கரு ஜெயசூரியாவும் சென்றிருந்தனர்.

அச்சமயம் கூரையில் ஏறி வேலையில் ஈடுபட்டிருந்த சிறுவன் கூரைச்சீற் உடைந்து கீழே வீழ்ந்தான்.

அவர்கள் இருவரும் அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருகில் அந்தச் சிறுவன் திடீரென வீழ்ந்த போதும் அவர்கள் இருவரும் காயம் எதுவும் இன்றித் தப்பினர். அருகில் இருந்த பெண் ஒருவர் காயமடைந்தார். (ஐ-150-3)

இனப்பிரச்சினை விவகாரம்

# கொழும்பில் இவ்வாரம் பல சுற்றுப் பேச்சுக்கள்

கொழும்பு, மே 27

இனப்பிரச்சினை விவகாரத்துக்கு தீர்வு காண்பது தொடர்பாக கொழும்பில் இந்த வாரம் பலசுற்று—பலதரப்பு—பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன.

**இன்று**

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவுக்கும் இடையில் இன்று பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

**நாளை**

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து தமிழ்க் கட்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை அரசின் சார்பில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி எல். பீரிஸ் நாளை அழைத்துப் பேசவிருக்கின்றார்.

ஈ.பி.டி.பி., புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி ஆகிய ஐந்து தமிழ்க் கட்சிகளுக்கே இச்சந்திப்பில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

**நாளை மறுதினம்**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டக் குழு ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேரில் சந்தித்து விவாதிக்கும் என அறிவிக்கப்பட்டது.

**வெள்ளியன்று**

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் தற்போதைய அரசியல் நிலைமை குறித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நல்லிணக்கக் குழுவுடன் வெள்ளியன்று பேச்சு நடத்தவிருக்கின்றார்கள்.

இந்தக் சந்திப்பின் போது ஐ.தே. கட்சி குழுவில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவும் இடம்பெற்றிருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

### ரம்பைக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ ஞானசேகரம் உதயஸ்ரீ.
★ நடராஜா சசிக்குமார்.
★ பாலசிங்கம் ஜெயக்குமார்.
★ செல்லத்துரை குமாரிபீனா.
★ துரைசாமி சசிகலா.
★ மாரிமுத்து மாரியம்மா.

இதேவேளை — தற்போதைய படை நடவடிக்கையில் கடந்த சனியன்று இடம்பெற்ற மோதலில் 30 புலிகள் கொல்லப்பட்டதாக அரசு வெளியிட்ட தகவலை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். (உ-21)

### ஈழ விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

நாளை சென்னையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கான அழைப்பை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (ஐ)

### ஈ. பி. டி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

ளது. அத்தகைய செயல்களுக்கும் எமக்கும் தொடர்பு ஏதுமில்லை என்பதை பொதுமக்களின் கவனத்துக்கு திட்டவட்டமாகத் தெரிவிக்கவிரும்புகின்றோம்.

நாம் இந்த மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றோம். இங்கு இடம்பெறும் இத்தகைய கைது போன்ற செயல்களுக்கும் எமக்கும் உடன்பாடில்லை; தொடர்பு ஏதுமில்லை; அவற்றை நாம் கண்டிக்கின்றோம்.

இத்தகைய செயல்களுக்கு ஈ.பி.டி.பியின் பெயரைப் பயன்படுத்தும் தீய சக்திகளின் போக்கையும் கண்டிக்கின்றோம்.

அப்பாவிகள் கைது செய்யப்படும் போது அவர்களை விடுவிக்க எடுக்கப்படும் முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபடுவது எமது அரசியல் பணியாகும்.

இவ்வாறு விடுவிக்கப்படுவோர் தொடர்பான விடயங்களில் இடைத் தரகர்கள் தலையிட்டு பணம், நிதி சம்பாதிக்க முயன்றிருப்பதும் எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்தகைய தவறான செயல்கள் தொடர்பாக விழிப்பாக இருக்கும்படி மக்களை வேண்டுகின்றோம். அவற்றை உடனுக்குடன் எமது கவனத்துக்குக் கொண்டு வந்தால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க நாம் ஏற்பாடு செய்வோம்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 27

அரச மொழி பெயர்ப்பாளர் க. வி. கந்தவேளின் ''நெருக்கீடு'' கருத்தரங்கு நாளை புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறும். (இ-4)

## புதுடில்லியில் லேசான நில நடுக்கம்

புதுடில்லி, மே 27

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியை கடந்த வெள்ளியன்று பிற்பகல் சிறிய அளவிலான பூமியதிர்ச்சி தாக்கியது. இதனால் இழப்புகளோ சேதங்களோ ஏற்படவில்லை. றிச்டர் அளவில் இந்த அதிர்வு 2.5 எனப் பதிவாகியது. (ஐ)

### 50 லொறிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வவுனியாவிலிருந்து இப்பொருள்களை ஏற்றி வரும் லொறிகளில் இருந்து சாந்தசோலையில் வைத்தே பொருள்கள் மாற்றப்படுவது வழமையான நடவடிக்கையாகும்.

இனிமேல் இவ்வாறு வவுனியாவிலிருந்து ஏற்றிவரப்படும் பொருள்கள் பறையனாளங்குளம் பகுதியில் வைத்தே, இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்திலிருந்து வரும் லொறிகளுக்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மடுறோட், மடுச்சந்தி, மடுக்கோயில், பாலம்பிட்டி, பெரியமடு ஆகிய பகுதிகளூடாக பள்ளமடுவுக்கு லொறிகள் செல்ல வேண்டும்.

அங்கிருந்து —

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பொருள்களை ஏற்றி வரும் லொறிகள் பல்லவராயன்கட்டு, ஜெயபுரம், அக்கராயன்குளம் பகுதிகளுக்கும்—

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பொருள்களை ஏற்றிவரும் லொறிகள் வெள்ளாங்குளம், துணுக்காய், மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கும் —

செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களை அவசரமாக எடுத்து வருவதற்காக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த லொறிச் சாரதிகளையும் உதவியாளர்களையும் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திக்குமாறு வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(உ-21-164)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 27-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org